**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF** Judicial Magistrate, Nanguneri

Calendar
Miscellaneous
Preliminary register
Sessions
} CC.No. 127/2018

Deposition Of Witness for { Prosecution PW 2 / Defense / Court

Name திரு. இசக்கி

Husband Name / Father's Name

Village

Taluk

Religion Muslim/Christian/Hindu

Age /2022

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11th day of October 2022.

நான் மருதகுளத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் வேலை பார்த்து வருகிறேன். அ.சா.1 என் தம்பியின் மனைவி ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். என்னுடைய ஊர்காரர். கடந்த 09.12.2017 ஆம் தேதி மாலை சுமார் 05.00 மணியளவில் நான் வயலில் நின்று கொண்டிருந்த போது எனது வயலில் இருந்து இரண்டு வயல்கள் தள்ளி இருந்த வயலில் அ.சா.1 யை ஆஜர் எதிரி அடித்து தள்ளிவிட்டார். நான் சத்தம் கேட்டு அந்த வயலுக்கு சென்றேன். நான் செல்லும் போது அ.சா.1 அங்கிருந்து சென்றுவிட்டார். பின்னர் 11.12.2017 ஆம் தேதி நான் காவல்நிலையத்திற்கு விசாரணைக்கு சென்றேன் அப்போது நான் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்தேன். காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான் அந்த கையெழுத்து **அ.சா.ஆ. 2** ஆகும். வழக்கு பற்றி போலீஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

11.12.2017 ம் தேதி 10.00 மணிக்கு சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறங்களையும் மூன்றடைப்பு காவல் உதவி ஆய்வாளர் உங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்த போது உடன் இருந்து சாட்சியாக கையொப்பம் செய்துவிட்டு தற்சமயம் உண்மைக்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 127/2018 |
| Deposition Of Witness for | Prosecution PW 1<br>Defense<br>Court |
| Name | திருமதி. லெட்சுமி |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2022 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 11th day of October 2022.

நான் மருதகுளத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். என்னுடைய ஊர்காரர். கடந்த 09.12.2017 ஆம் தேதி எனது அம்மா நம்பியம்மாள் என்பவர் எங்கள் வீட்டில் பொங்கல் விழாவிற்கு வெள்ளை அடித்து கொண்டிருப்பதால் எனது அம்மா மாலை 05.30 மணியளவில் எங்கள் ஊரில் உள்ள வயலில் மாடு மேய்த்து கொண்டிருந்தார். எங்கள் ஊரில் உள்ள அம்மன் கோவிலில் எனது வீட்டுகாரரின் அண்ணன் இசக்கி கோவில் தர்மகர்த்தாகவாக இருந்தார். இசக்கிக்கும் ஆஜர் எதிரிக்கும் கோவில் சம்பந்தமாக ஏதோ பிரச்சனை இருந்து வந்துள்ளது. இதுசம்பந்தமாக ஆஜர் எதிரி எனது தாயாரான நம்பியாளிடம் பிரச்சனை செய்து கொண்டிருந்தார்.

நான் எனது அம்மாவை ஆஜர் எதிரியிடம் பிரச்சனை வேண்டாம் என்று நான் அழைத்து வந்தேன் அப்போது என்னிடமும் பிரச்சனை செய்தார். நான் சம்பவ இடத்திலிருந்து போக முற்பட்ட போது ஆஜர் எதிரி என்னை 3 தடவை முதுகில் அடித்தார். பின்னர் காவல்நிலையத்திற்கு அன்றைய தினம் சுமார் இரவு 08.00 மணியளவில் புகார் அளித்தோம். அப்போது அவர் எங்கள் மீது புகார் அளித்ததாக கேள்விபட்டோம். பின்னர் எனக்கு முதுகில் வலி திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சென்றோம் அவர்கள் எனக்கு சதைபிடிப்பு இருப்பதாக சொன்னார்கள்.

பின்னர் மறுநாள் வருபிடி எடுப்பதற்காக திருநெல்வேலி சென்றேன். பின்னர் மறுநாள் சம்பவ இடத்திற்கு வந்து போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டார்கள். பின்னர் 11.12.2017 ஆம் தேதி காவல்நிலையத்தில் இருந்து அழைத்தார்கள். அன்றைய தினம் புகார் அளித்தேன்.

காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆகும். போலீஸார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு சொந்தமாக வயல் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வயலில் சம்பவ காலத்தில் நெற்பயிர் பயிரிட்டு விவசாயம் செய்து வந்தேன். பொதுவாக வயலில் நெற்பயிர் எந்த காலத்தில் பயிரிடுவார்கள் என்றால் எனக்கு விவசாயத்தை பற்றி அவ்வளவாக தெரியாது. சம்பவத்தின் போது வயலில் பயிர் எதுவும் செய்யவில்லை அறுவடை செய்யப்பட்டிருந்தது.

வழக்கு சம்பவமானது சிம்சன் நாடார் உடையது என்றால் சரிதான். மேற்படி வயலுக்கும் எனது வீட்டிற்கும் இடையே உள்ள தூரம் ஒரு கிலோ மீட்டருக்கு குறைவாக தான் இருக்கும். சம்பவத்தை எனது கணவர் நேரடியாக பார்க்கவில்லை. எனது உறவினரான இசக்கிமுத்து என்பவர் அம்மன் கோவில் தர்மகர்த்தாவாக உள்ளார் மேற்படி கோவிலில் குத்துவிளக்கு களவு போய்விட்டது என்றும் அதுகுறித்து இசக்கிமுத்துவிடம் எதிரி கேள்விகேட்டார் என்றும் அதனால் அவருடைய வேண்டுகோளின் படி ஆஜர் எதிரி என்னை அடித்ததாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

அ.சா.ஆ.1 புகாரை நான் எழுதவில்லை நான் கையெழுத்து மட்டும் செய்தேன் நான் சொன்ன விபரத்தை போலிசார் எழுதி கொண்டார்கள். எதிரிக்கும் எனக்கும் எந்தவிதமான முன்விரோதம் இல்லை என்றால் சரிதான். விவசாய வேலை செய்யும் போது கீழே விழுந்து எனக்கு காயம் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் மருத்துவமனையில் மருத்துவரிடம் ஒரு நபர் முதுகில் அடித்து தள்ளிவிட்டதாக தெரிவித்தேன். நான் சொல்வதுபோல் ஆஜர் எதிரி என்னை அடிக்கவில்லை என்றும், எனது கணவரின் அண்ணன் இசக்கிமுத்து கேட்டுகொண்டதன் பேரில் பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**